முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 623/2020

தேதி : 25-03-2025

(வா.சா.3) – திரு.சண்முகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1,2-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1,2 -ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நானும் பொன்னுசாமி என்பவரும் கடந்த 35 ஆண்டுகளாக நில முகவர்களாக இருந்து வருகிறோம் என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். அதைப்பற்றியான விபரங்களை என்னால் சொல்லமுடியும் என்றால் சரிதான். கோதைமங்கலம் கிராமம் சர்வே எண். 387 ல் 1 ஏக்கர் 70 செண்ட் ஏழுமலைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு செ ாத்தின் கீழ்புறம் உள்ள சர்வே எண். 385/1 முதல் 6 வரை மற்றும் 393/2 ஏ கட்டுப்பட்ட 1 ஏக்கர் 64 செண்ட் ஜெகநாதனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஜெகநாதன், ஏழுமலை சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்படி ஜெகநாதனுக்கு பாத்திய்பபட்ட சொத்தின் கீழ்புறம் அமைந்துள்ள சர்வே எண். 386/7, 393/2பிக்கு கட்டுப்பட்ட 3 செண்ட் ஏழுமலை, ஜெகநாதனுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஜெகநாதனுக்கு பாத்தியப்பட்ட மேற்படி 1 ஏக்கர் 64 செண்ட் பொன்னுசாமி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அந்த பொன்னுசாமியும், நானும்தான் நில முகவர்களாக உள்ளோம் என்றால் சரிதான்.

2. மேற்படி சர்வே எண். 386/7ல் உள்ள 1 ஏக்கர் 53 செண்ட்டில் பிரிவினை இல்லாத 76-1/2 செண்ட்டை ஜெகநாதன் பொன்னுசாமிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.01.06. 1998ம் ஆண்டு மேற்படி ஏழுமலையும், பொன்னுசாமியும் சேர்ந்து சர்வே எண். 381/1 முதல் 6ல் கண்ட சொத்தின் மேல்புறம் 78 செண்ட்டை ஏழுமலைக்கு பரிவர்த்தனை செய்துகொடுத்தார் என்றால் சரிதான், அந்த ஆவணத்தில் தெற்குபக்கம் ஒரு பாதையும் காட்டப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும், அந்த ஆவணத்தில் குறிப்பிட்டு தெற்கு புறம் ஒரு பாதை காட்டவில்லை என்றால் சரியல்ல. ஏழுமலை அவருக்குண்டான பிரிவினை இல்லாத

சர்வே எண். 386/7ல் கண்ட சொத்தை பொன்னுசாமிக்கு பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் (Exchange) என்றால் சரிதான். ஏழுமலைக்கு பாத்தியப்பட்ட மேற்படி 1 ஏக்கர் 70 செண்ட் மற்றும் கீழ்புறம் சர்வே எண். 386/1 முதல் 6 ல் கண்ட 78 செண்ட்டை அவர் அனுமதி பெற்று பிளாட் செய்து விற்று வந்தார் என்றால் அவர் அனுமதி பெறவில்லை. நான் சொல்வது தவறு என்றும், ஊராட்சியில் அனுமதி பெற்று மேற்குபக்கம் உள்ள சொத்தை 1 முதல் 59 பிளாட் கிரையம் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. மேற்படி 1 முதல் 59 பிளாட்டில் பகுதி கிரையம் செய்ததுபோக மீதமுள்ள பிளாட்டை ரத்தினத்திற்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான், அதிலும் வண்டிப்பாதையை காட்டியுள்ளார். மேற்படி ரத்தினம் பிளாட் எண். 58 மற்றும் 59ல் கண்ட சொத்தை செல்வகனி என்பவருக்கு விற்றார் என்றால் தெரியாது, ஆனால் அந்த சொத்தை நாங்கள் ஏற்கனவே கிரையம் செய்து கொடுத்துவிட்டோம். செல்வகனி கிரையம் பெற்ற சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான், 2000ற்கு பின்னர் தான் தெரியவந்தது. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய அந்த சொத்தை 2ம் பிரதிவாதிக்கு பவர் எழுதிக்கொடுக்கப்பட்டு தற்போதுவரை அவருடைய பராமரிப்பில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

4. சர்வே எண். 386/1 முதல் 6 கட்டுப்பட்ட கீழ்புற சொத்தை 84 செண்ட்டை மற்றும் சர்வே எண். 386/7க்கு கட்டுப்பட்ட 1 ஏக்கர் 53 செண்ட்டையும், சேர்த்து நாங்கள் பிளாட் செய்து கிரையம் செய்தோம் என்றால் சரிதான், ஆனால் சர்வே எண். 393/2ஏ, 2பியும் அடங்கும், மொத்தம் 2 ஏக்கர் 42 செண்ட். சர்வேஎண். 393/2ஏ, 2பி சம்பந்தப்பட்ட ஆவணத்தை தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல்செய்துள்ளேன். சர்வே எண். 393/2ஏ மேல்புறம் தான் உள்ளது என்றால் சரிதான், அது பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து. மேற்படி 2 ஏக்கர் 42 செண்ட் நிலத்திற்கு அனுமதி பெற்றதை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. அது என் வசம் உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும். வழக்கு சொத்து பிளாட் எண். 35ல் வருகிறது என்றால் சரிதான்.

5. பிளாட் எண். 58, 59க்கு கட்டப்பட்ட சொத்தை தான் பிளாட் எண். 35 ஆக

உற்பத்தி செய்து கிரையம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் அடிப்படையில் துர்கையம்மாள் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நிலத்தில் இல்லாத ஒரு சொத்தை பொறுத்து பொன்னுசாமி எனக்கு கிரையம் செய்து கொடுத்த உற்பத்தி ஆவணத்தின் அடிப்படையல் துர்கையம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. துர்கையம்மாள் கிரையம் வாங்கிய ஒரு பகுதியை வாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ரத்தினம்பழனி நகராட்சிக்கு பாதை சம்மந்தமாக 2000ல் ஒரு ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. 20–3/4 அடி அகலம், 260 அடி நீளம் கொண்ட பாதையை பற்றி எந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் பரிவர்த்தனை ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பரிவர்த்தனை ஆவணத்தில் அளவுகள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை, தென்புற பாதைதான் என்று தான் சொல்லப்பட்டுள்ளது, அளவுகள் பொன்னுசாமி ஏழுமலையும் எழுதிக்கொண்ட 20 ரூபாய் பத்திர ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என்வசமுள்ளது நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

6. 1 ம் பிரதிவாதி பிளாட் எண். 58, 59 சொத்தை வாங்கியபின்னர் பட்டா மாறுதலுக்காக மனு கொடுக்கும்போது நானும், பொன்னுசாமியும் ஆட்சேபனை செய்தோம் என்றால் சரிதான். அ தன்பின்னர் நான், நாகாத்தாள், துர்கையம்மாள், பொன்னுசாமி ஆகியோர் சேர்ந்து பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றதில் oS 58/2006 நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி தள்ளுபடி ஆன வழக்கை மறைத்து நாகாத்தாள், துர்கையம்மாள் வழக்கு சொத்தை பொறுத்து வழக்கு தங்களுக்கு சாதகமாகிவிட்டது என்று சொல்லி பட்டா எண். 2749 பெற்றிருந்தார்கள் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் தெரியாது.

7. மேற்படி மேல்முறையீடு உத்தரவில் வழக்கு விபரத்தை மறைத்து பெற்றுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி பட்டா தொடர்பான அனைத்து விபரங்களும் எனக்கும் தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது

என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி மேல்முறையிட்டில் உத்தரவில் 30 நாட்களுக்குள் DRO முன்பு மேல்முறையீடு தாக்கல் செய்யலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றும், ஆனால் அதை மறைத்து வாதி இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு பாத்தியப்படாத சொத்தை பொறுத்து நான் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றும், அதனடிப்படையில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. உண்மையில்லாத ஆவணங்களின் அடிப்படையில் கிரையம் செய்து கொடுத்துள்ளததால்தான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நாகாத்தாள் பெயரில் பட்டா இல்லை என்றால் தெரியாது.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.